**பொலன்னறுவ மாவட்டத்தின் 13 கமநலசேவை குழுக்ம் - 2023**

-------------------------------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

பொலன்னறுவ மாவட்டத்தின் 13 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
பொலன்னறுவ மாவட்டத்தின் 13 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த 13 அறிக்கைகளில் 02 குழுக்களுக்கு மறுப்பு அறிப்பிராயங்களும் 11 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டது. அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 கமநலக் குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பு தொடர்பாக அவற்றின் கிரயம், பயன்படு ஆயுட் காலம், காலப் பகுதியின் ஆரம்பம் மற்றும் இறுதியில் திரண்ட பெறுமானத் தேய்வு நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 03 குழுக்களினால் கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் ஆரம்பப் பெறுமதி மீது பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததென நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவற்றின் தேறிய பெறுமதியின் மீது பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 12 குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி ரூபா 11,895,312 பெறுமதியான 27 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்கள் தனதாக்கல் நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 08 குழுக்களினால் ஏனைய தரப்பினரிடமிருந்து கிடைத்திருந்த 18 சொத்து விடயங்களின் கிரயங்களை இனங்காணும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் தேவைப்பாடுகளை கவனம் செலுத்தி தனதாக்கிய திகதியில் உள்ளவாறு அதன் நியாயமான பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேதிரிகிரிய கமநல சேவைக் குழுவினால் சேதனப் பசளை மூலப்பொருள் தூளாக்கும் இயந்திரம் வேறு தரப்பினர் ஒருவருக்கு அப்புறப்படுத்தியிருந்ததெனவும் மற்றும் ஏனைய கமநல சேவைக் குழுக்களுக்கு கிரயத்தை இனங்காண முடியாதுள்ளது என. | - மேற்படி - |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் படி இருப்புகள் தொடர்பான நட்டங்கள், அந்த நட்டங்கள் நேரிடுகின்ற காலப் பகுதியிலேயே செலவு ஒன்றென இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், 04 குழுக்களினால் முன்னைய ஆண்டுகளின் போது சேதமடைந்திருந்த, காலவதியாகியிருந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக காலவதியாகியிருந்த கிரயம் ரூபா 1,067,886 தொகை பெறுமதியான இருப்புக்கள் தொடர்பாக அவ்வாறு கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஊ) | 02 குழுக்களினால் சொத்துக்களை பயன்படுத்தக்கூடியது என எதிர்பார்த்த காலப் பகுதியை மீண்டும் மீளாய்வு செய்திருக்காமையால் தொழிற்படு பயன்பாட்டில் காணப்பட்ட கூட்டுக் கிரயம் ரூபா 171,597 தொகைக்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டு இறுதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை பயன்படுத்தக்கூடியது என எதிர்ப்பார்க்கப்பட்ட காலப் பகுதியை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 11 கமநல வங்கிகளினால் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும் அனைத்து எண்ணிக்கை சார் தகவல்களுக்காக கடந்த காலப் பகுதியின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியிருந்த மாதிரிக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஏ) | 11 குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் மூலம் சமர்ப்பித்திருந்த பொருத்தமான மாதிரியின் படி நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியிருந்த மாதிரிக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்பட வேண்டும். |

### 1.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 குழுக்களினால் கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டியிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 08 குழுக்களினால் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவர்களின் கையில் காணப்பட்ட ரூபா 9,021,705 இற்கான விற்பனைப் பெறுமதியொன்றை கொண்டிருந்த இருப்பு நிதிக்கூற்றுக்களில் விற்பனை என இனங்காணப்பட்டிருந்தது. | கடன் விற்பனை என கணக்கீடு செய்யப்பட்டது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் மூலம் விவரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி பண்டங்கள் விற்பனை மூலமான வருவாய்கள் இனங்காணப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 05 குழுக்களினால் மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 296,339 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | காலப் பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 04 குழுக்களினால் மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 475,736 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (உ) | 06 குழுக்களினால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 806,755 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஊ) | 04 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 562,072 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | காலப் பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 02 குழுக்களினால் மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வு கழித்தல் ரூபா 213,688 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | பகமூன கமநல சேவைக் குழுவினால் 02 நிலையான வைப்புக்கள் தொடர்பாக அந்தக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் மீளாய்வாண்டில் முதிர்வடையும் திகதி வரையான வட்டி வருமானம் ஆகிய ரூபா 536,580 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஐ) | பகமூன கமநல சேவைக் குழுவினால் புதியநகர் கமநல சேவைக் குழுவிற்கு வழங்கி, அதன் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,090,085 தொகைக்கான டிரக்டர் வண்டியின் பெறுமதி தொடர்ந்தும் பகமூன கமநல சேவைக் குழுவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | முறைப் பிரகாரம் உரிமையை உரித்தாக்கி முறையான அங்கீகாரத்தின் மீது கணக்குகளில் சீராக்கல் மேற்கொண்டு சரி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | புலசிதிகம கமநல சேவைக் குழுவின் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான கூட்டுப் பெறுமதி ரூபா 4,174,986 இற்கான பெறுவனவு காசுப்பாய்ச்சல் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஓ) | 03 குழுக்களில் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய ரூபா 1,084,502 தொகை பெறுவனவு காசுப்பாய்ச்சல் ரூபா 1,500,000 இற்கான கொடுப்பனவுக் காசுப்பாய்ச்சல், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதித் தொழில்பாடுகளின் கீழ் சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யபடும் என. | - மேற்படி - |
| (ஔ) | சேவாகம கமநல சேவைக் குழுவினால் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய கணினி தனதாக்கலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 650,000 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (க) | 04 குழுக்களில் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த உர உபயோகத்திற்கான பணம் ரூபா 6,342,508 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என இனங்காணப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | காலப் பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்களை முறைப் பிரகாரம் இனங்கண்டு உரிய முறையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ங) | 03 குழுக்களினால் கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,950,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 06 கணினி துணைக் கருவிகளின் கொள்வனவு விலை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் மூலம் வழங்கியிருந்த வாய்மொழிமூல அறிவுரையின் படி கணக்கீடு செய்யப்பட்டது என. | கமநல சேவைக் குழுக்களின் சொத்துக்கள் அதிகரித்தல் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ச) | 07 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டிற்குரிய வட்டி | சரி செய்யப்படும் என. | அட்டுரு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ரூபா 470,194 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஞ) | சேவாகம கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டத்தின் கணக்குக் காலப் பகுதி ஆரம்பத்தில் பெற வேண்டிய கடன் வட்டி வருமானம் ரூபா 310,522 தொகை மிகையாகவும், காலப் பகுதி இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய கடன் வட்டி வருமானம் ரூபா 351,245 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ட) | 07 கமநல வங்கிகளின் முன்னோடிச் செயற்திட்டங்களின் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய ரூபா 30,701,647 இற்கான காசுப் பாய்ச்சல் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான ரூபா 5,298,472 இற்கான கொடுப்பனவு காசுப்பாய்ச்சல் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ண) | 04 கமநல வங்கிகளின் முன்னோடிச் செயற்திட்டங்களில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலமான ரூபா 83,485,392 இற்கான தேறிய காசுப்பாய்ச்சல் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (த) | 03 கமநல வங்கிகளின் முன்னோடிச் செயற்திட்டங்களில் நிதித் தொழிற்பாடுகள் மூலமான ரூபா 2,644,989 இற்கான பெறுவனவு காசுப்பாய்ச்சல் மற்றும் நிதித் தொழிற்பாடுகள் மூலமான ரூபா 2,051,248 இற்கான கொடுப்பனவுக் காய்ச்சுப் பாய்ச்சல் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ந) | 02 கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டங்களில் நிதித் தொழிற்பாடுகளின் மூலமான ரூபா 10,297,200 இற்கான பெறுவனவுக் | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காசுப் பாய்ச்சல், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ப) | மனம்பிடிய கமநல வங்கியில் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய ரூபா 265,470 தொகை பெறுவனவுகள், நிதித் தொழிற்பாடுகளின் கீழான காசுப் பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

### 1.1.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவை குழுக்களில் 06 பேரேட்டுக் கணக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படி மீதி மற்றும் தொடர்புடைய அறிக்கையின் படி மீதியிடையே கூட்டுப் பெறுமதி ரூபா 6,672,145 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கஞ் செய்யப்பட்டு சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.1.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 குழுக்களினால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 30,558,267 தொகைக்கான 317 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும் என. | நிதிப் பிரமாணம் 245(1) மற்றும் 257 இன் படி செயற்பட வேண்டும். |

### 1.1.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவைக் குழுக்கள் தொடர்பாக 50 கணக்கு விடயங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுப்பெறுமதி ரூபா 197,652,593 தொகைக்காக மீதிகளை உறுதிப்படுத்தல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, பற்றுச்சீட்டுக்கள், பில் பத்திரங்கள், காலப் பகுப்பாய்வு மற்றும் வருமானப் பதிவேடு | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை பரிசோதனை செய்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மேதிரிகிரிய கமநல சேவைக் குழுவின் நாளாந்த கொடுப்பனவு பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள ரூபா 8,333,055 தொகைக்கான கொடுப்பனவுகளுக்கான 40 உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் என, கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்** | | | |
| (i) | பிரிவு 52(1) | 10 குழுக்களினால் அதிகாரப் பிரதேசத்திற்கான விவசாய நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | 04 குழுக்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ளது எனவும் மற்றும் 03 குழுக்களினால் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | பிரிவு 54(1) | 08 குழுக்களினால் காணி உரிமை விவசாயிகள் மற்றும் காணி அனுபவிப்போரினால் தமது விவசாயக் காணி தொடர்பாக சபையினால் குறிப்பிடக்கூடிய ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நடாத்திச் செல்லப்பட்ட விவசாயக் காணியின் அலுவல்கள் தொடர்பாக தகவல்கள் ஆவணம் ஒன்றின் மூலம் அறிவித்திருக்கவில்லை. | 04 குழுக்களினால் எதிர் காலத்தில் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஒரு குழுவினால் செய்முறை ரீதியாக மேற்கொள்ள முடியாமல் உள்ளது எனவும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | பிரிவுகள் 54(2),(3),(4),(5) | 08 குழுக்களினால் மேற்கூறிய பொறுப்புக்களை நிறைவேற்றாத காணி உரிமை விவசாயிகள் மற்றும் காணி அனுபவிப்போர் | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 105 | ஹிங்குரக்கொட கமநல சேவைக் குழுவில் 2021 ஆண்டின் போது பிழையான தகவல்களை உட்படுத்தி உறுதிச்சீட்டுக்களை தயாரித்து கட்டிட திருத்த வேலை அலுவல் ஒன்றிற்காக ரூபா 146,000 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எழுத்துமூல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 133, 134(3) | 05 கமநல சேவைக் குழுக்களின் பணம் மற்றும் விவசாய கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என. | - மேற்படி - |
| (iii) | நிதிப் பிரமாணம் 214 | 12 குழுக்களினால் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யக்கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 2006 திசெம்பர் 14 திகதிய 2006/08 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்கள் 109 மற்றும் 756 | 03 குழுக்களினால் ரூபா 714,795 தொகை பெறுமதியான காலவதியாகிய உரம் மற்றும் இரசாயனப் பொருட்கள் பதிவழித்தல் தொடர்பான சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | கமநல சேவை ஆணையாளரின் 2014 திசெம்பர் 31 திகதிய 10/2014 இலக்கம் கொண்ட சுற்றிக்கை | • சுற்றறிக்கை அறிவுரையின் படி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிலைய எழுதுனர்களினால் இருப்புப் பதிவேடுகள் பரிசோதனை செய்தல் மற்றும் குறைந்த அளவு மாதத்திற்கு ஒரு முறையேனும் பௌதீக இருப்பினை பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 04 கமநல சேவைக் குழுக்களினால் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் செயற்பட வேண்டும். |
| | | • மெதிரிகிரிய கமநல சேவைக் குழுவினால் அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்காக சேர்க்கப்பட்டு விற்பனை நிலையத்தில் பணம் மற்றும் இருப்புக்களை பரிமாறல் மேற்கொள்ளும் ஊழியர்கள் இருவருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க முறைப் பிரகாரம் கடமை சாட்டுதல்கள் மற்றும் பொறுத்தமான விதத்தில் நியமனக் கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 13 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 36,636,062 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் 12 குழுக்களில் மிகையும் மற்றும் குழுவொன்றின் பற்றாக்குறையும் முறையே ரூபா 17,660,759 தொகை மற்றும் ரூபா 25,945 தொகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் படி 13 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,834,524 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,572,499 தொகையாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

யூரியா உர விற்பனை வருமானம் மற்றும் நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் அதிகரித்தல் உர விற்பனை செலவுகள் மீளளிக்கப்படல் 13 குழுக்களின் மிகைக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் அறிவுரையின் படி, 06 குழுக்களின் உத்தியோகத்தர்கள் சேவை நிலையத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் நேரங்கள் விரலடையாள இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விரல் அடையாள இயந்திரம் செயற்படாது உள்ளது என. | சுற்றறிக்கைகள் அறிவுரைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | அபகஸ்வெவ கமநல சேவைக் குழுவின் ரூபா 24,323 தொகை பெறுமதியான வாயு ரைபல் ஒன்று முன்னர் இருந்தே பிரதேச உத்தியோகத்தரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட உபகரணத்தை திருப்பிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட உபகரணத்தை மீண்டும் திருப்பிப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 05 குழுக்களின் நிலையான வைப்பு வட்டி வருமானத்தின் மீது வங்கியினால் அறவீடு செய்திருந்த ரூபா 272,345 வரித்தொகை 2011 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 70 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க திருப்ப அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | பகமூன கமநல சேவைக் குழுவின் 06 உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த 24 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மீண்டும் குழுவிற்கு திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 01 திகதிய 01/2011 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மேதிரிகிரிய கமநல சேவைக் குழுவின் 2023 ஜனவரி முதல் ஏப்ரல் | உத்தியோகத்தரிடம் விடுதலைக்கான காரணத்தை | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலப் பகுதி தொடர்பாக விற்பனை உதவியாளரினால் கையினால் தயாரிக்கப்பட்டிருந்த நாளாந்த இருப்பு விநியோகப் பதிவேடு 2023 ஜனவரி 01 திகதி முதல் ஜூன் 01 வரையான காலத்திற்குரிய வங்கியில் வைப்புச் செய்த பணம் தொடர்பாக வங்கி பெறுவனவுப் பற்றுச் சீட்டு மற்றும் பற்றுச்சீற்று அந்தக் காலப் பகுதியில் கமநல சேவைக் குழு எழுதுனராக கடமையாற்றிய உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்ட போதிலும் காணாமல் போயுள்ளமை தொடர்பாக தாபனக் கோவையின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களினால் நேரிடக்கூடிய குற்றமொன்று ஏற்பட்டிருந்தா என விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | வினவி கமநல சேவை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | 04 கமநல சேவைக் குழுக்களின் காணிகள் கமநல சேவை ஆணையாளர் நாயகத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கிரிதலே கமநல சேவைக் குழுவினால் 2021 சிறு போகத்திற்காக செயற்படுத்தப்பட்டிருந்த விளைச்சலை கொள்வனவு செய்யும் அரசின் விரைவான வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் போது குழுவின் விவசாய ஆய்வு உற்பத்தி உதவி பெண் உத்தியோகத்தர்கள் இருவர்களினால் ரூபா 715,000 தொகை விவசாயிகளிடம் முறைசாரா விதமாக பெற்றுக்கொண்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக தாபனக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் 13 ஆவது பந்தியின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | உர இருப்புக்களை துஷ்பிரயோகம் செய்த காரணத்தினால் 02 குழுக்களில் கடமையாற்றி பெண் எழுதுனர்களினால் அதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 148,099 தொகையினை அறவீடு | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்வதற்காக போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 03 கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டங்களுக்காக 2001 முதல் 2011 வரையான காலப் பகுதியில் 78 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த ரூபா 768,964 இற்கான கடன் தொடர்பான உடன்படிக்கைகள் காணாமல் போயிருந்தது. | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 3.4.7(ii) இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 13 கமநல சேவை நிலையங்களினால் ரூபா 90,512,754 தொகைக்கான 2277 நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு விசாரணை மேற்கொண்ட கடன்பட்டோர்களின் எண்ணிக்கை 645 எனவும், நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் எண்ணிக்கை 446 தொகை எனவும் அவற்றில் நீதிமன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் எண்ணிக்கை 41 எனவும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | 07 கமநல வங்கிகளில் 850 செயற்படாத சிறு குழுக்கள் எண்ணிக்கை காணப்பட்டது. | செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சிறு குழுக்களை செயற்படு நிலையில் பேணிச் செல்ல வேண்டும். |
| (ஔ) | வெளிகந்த விவசாய வங்கி முன்னோடிச் செயற்திட்டத்தின் கூட்டுப்பெறுமதி ரூபா 13,572,111 தொகைக்கான பங்குப் பணம், சாதாரண வைப்புப் பணம், சிறுவர் சேமிப்பு, விவசாய அமைப்புக்கள் மற்றும் சிறு குழுக்களின் வைப்புத் தொகைக்காக பொருத்தமான மாதிரிக்கு இணங்க பதிவேடுகள் கையினால் பதிதல் (Manual Method) நாளதுவரை பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பேரேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெதிரிகிரிய கமநல சேவைக் குழுவின் 2023 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த விற்பனை வருமானத்தை வங்கியில் இடாமல் தடுத்து வைத்திருந்த தொகை ரூபா 794,152 ஆகக் காணப்பட்டது. குழுவின் மற்றும் விற்பனைப் பிரிவின் குறிப்பிட்ட செலவுகள் விற்பனை உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்டதென தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ரூபா 645,646 தொகைக்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட உறுதிச் சீட்டுக்கள் அல்லது பணம் பெற்றுக்கொள்வதற்கான பற்றுச்சீட்டுக்கள் அல்லது கொடுப்பனவு சரியானது என உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், மீதியான ரூபா 148,506 தொகை தொடர்பான தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | முறையான விசாரணை மேற்கொண்டு துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரசின் ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அரசு சார்பாக பணம் ஏதும் கிடைத்தவுடன் பற்றுச்சீட்டொன்று வழங்க வேண்டும் என நிதிப் பிரமாணம் 168 இன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் மெதிரிகிரிய கமநல சேவைக் குழுவின் விற்பனை நிலையத்தின் மூலம் 2023 மே 28 முதல் 2023 ஜூலை 07 திகதியான காலப்பகுதியில் விவசாயிகளுக்கு பற்றுச்சீட்டு வழங்காமல் விற்பனை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு 10 மாதங்களின் பின்னர் ரூபா 16,514,631 தொகை பெறுமதியான போலியான பற்றுச்சீட்டொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | பற்றுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு நாளாந்த பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (இ) | மெதிரிகிரிய கமநல சேவைக் குழுவின் விற்பனை உதவியாளரினால் நாளிறுதியில் வங்கியில் இடப்பட்ட பணத்திற்கான வங்கிப் பற்றுச்சீட்டு நிலைய எழுதுனருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதற்கான பற்றுச்சீட்டு | சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டு நாளாந்தப் பணப் பெறுவனவு பதிவேட்டில் கணக்கீடு செய்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதென கண்காணிப்பு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும், 08 சந்தர்ப்பங்களில் வங்கியில் இடப்பட்ட ரூபா 17,685,707 தொகைக்கான பற்றுச்சீட்டுக்கள் இன்றி நாளாந்த பெறுவனவு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மெதிரிகிரிய கமநல சேவைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 345,087,635 இற்கான கொடுப்பனவுகள் சரியாவை என உறுதிப்படுத்துவதற்காக உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகை கிடைக்கப்பட்டதென பெறுவோரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் களஞ்சிய வழங்கல்களிற்கான கொடுப்பனவுகளின் போது பண்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்குரிய பண்டப் பதிவேடு அல்லது இருப்புப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான விசாரணை மேற்கொண்டு துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 கமநல சேவைக் குழுக்களின் 53 சொத்து விடயங்கள் விளைவற்று காணப்பட்டதுடன், அவற்றின் 39 விடயங்களின் பெறுமதி ரூபா 4,154,944 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. | வளங்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாதைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது பெறுகை நிறுவனங்களினால் கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கை முறைகளை கடைபிடிக்காமல் 02 கமநல சேவைக் | சரி செய்யப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுக்களினால் 2023 ஆண்டின் போது ரூபா 411,725 தொகை பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | பகமூன கமநல சேவைக் குழுவினால் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.4 இன் மூலம் விவரிக்கப்பட்டுள்ளவாறு பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |